செ.வெ.எண்: 21 /ஜூன் நாள் : 09.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## நடந்து முடிந்த 2017 ஆம் ஆண்டிற்கான 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளின் தேர்ச்சி குறித்து தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்களுடனான ஆய்வுக் கூட்டம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 09.06.2017 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில், நடந்து முடிந்த 2017 ஆம் ஆண்டிற்கான 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளின் தேர்ச்சி குறித்து தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசுகையில், "பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் அனைவரும் எவ்வித சாதி மத பேதமின்றி ஒற்றுமையுடன் சிறப்பாக கல்வி பயின்று தங்களின் அறிவுத்திறனை வளர்த்து கொள்ள வேண்டும். "ஒற்றுமையே வலிமை" என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியினை 9,10,11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு வரும் ஜூன் 15 தேதிக்குப் பிறகு முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் நடத்த உரிய ஏற்பாடுகளைச் செய்து, போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கி அவர்களை உற்சாகப் படுத்த தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாணவர்கள் சமூக விரோத செயல்களில் ஈடுபடாமல் இருக்க , தக்க அறிவுரைகளை மாணவ மாணவியர்களுக்கு ஆசிரியப் பெருமக்கள் வழங்க வேண்டும். சாதி உணர்வைத் தூண்டும் விதமாக மாணவர்கள் கை மற்றும் கழுத்துகளில் அடையாளச் சின்னமாக கயிறு கட்டுவதை முற்றிலும் தவிர்க்க அறிவுரை கூறி அவர்களுக்கு வழிகாட்டுதல் செய்ய வேண்டும்.

அனைத்து பள்ளி தலைமை தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் வரும் கல்வியாண்டில் இராமநாதபுரம் மாவட்டம் மாநில அளவில் முதலிடம் அடைவதற்கு செய்ய வேண்டிய பணிகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், "காவல் துறையினர் மற்றும் வருவாய் துறையினர் இதற்கு ஒத்துழைப்பு நல்கி மாணவர்களுக்கு தக்க விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டுதல்கள் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது " என்றார்.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) திரு.பாலசுப்பிரமணியன், உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.சர்வேஸ்ராஜ்,இ.கா.ப., உள்பட தலைமையாசிரியர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**